**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்.

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் நாள் செவ்வாய்கிழமை

இ.ம.எண்.166/2005 இன் அ.வ.எண்.165/2004

புவனகிரி வர்த்தகர் சங்கம் அதன்

செயலாளர் A.C.P. ரத்தினசுப்ரமணியன் ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ஸ்ரீராமன்
2. பொன்னாச்சி அம்மாள்
3. ராம திலகம் (இறந்தார்)
4. வசந்தா
5. விஜயலட்சுமி
6. ருக்மணி
7. பட்டாபிராமன்
8, நவமணி
9, பத்மாவதி (இறந்தார்)
10, தரணி
11, புவனகிரி வர்த்தகர் சங்கம் என்கிற
    பூராசாமி வர்த்தகர் சங்கம் புவனகிரி,
    அதன் தலைவர் R.ஸ்ரீராமன்
12. ஜெயராமன்
13. பாரத்
14. K.பிரேமா
15. R. சத்தியஞானம் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ராஜேந்திரன் அவர்கள் அஜராகியும், 1, 6 முதல் 8 மற்றும் 10 முதல் 15 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு. E. ஜெயராமன் அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 9 ம் எதிர்மனுதாரர்கள் இறந்த நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

**உத்தரவு**

மனுதாரால் உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி/ மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

வழக்கு விளம்புகை, இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையின் அம்சங்களை ஒரு பாகமாக பாவிக்க வேண்டப்பட்டுள்ளது, வழக்கில் வாதியாகிய தான் PW1 ஆக விசாரணை செய்யப்பட்டு தனது தரப்பில் PW2 & PW3 சாட்சி விசாரணை செய்யப்பட்டு மேற்கொண்டு, சாட்சி விசாரணை செய்ய வைக்கப்பட்ட நிலையில், தனக்கு உடல்நிலை சரியில்லாததால் தன்னால் உரிய நேரத்தில் வழக்கறிஞரை சந்தித்து சாட்சிகளை விசாரணை செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், தனது தரப்பு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது என தனது வழக்கறிஞர் மூலம் அறிந்தாகவும், தனது கட்சியை நிரூபணம் செய்ய மேலும்

இரண்டு சாட்சிகள் விசாரிக்க வேண்டி இருக்கிறது என்றும், சில ஆவணங்களும் தாக்கல் செய்ய இருக்கிறதாகவும், மேற்கொண்ட சாட்சிகள் மூலம் தனது வழக்கை நீதிமன்றத்திற்கு தெளிவாக நிரூபிக்க முடியும் என்றும், தன் தரப்பு வழக்கு விசாரணையை Reopen செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. 1 முதல் 11ம் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிரிருரையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் தனது தரப்பு சாட்சியத்தை 'Reopen' செய்ய வேண்டி மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுவில் சரியான காரணங்களை குறிப்பிடாமலும், சாட்சி பட்டில் மற்றும் / அல்லது குறியீடு செய்ய வேண்டி ஆவணத்தின் விவரங்களை குறிப்பிடாமல் மனுவை தாக்கல் செய்துள்ளாகவும், மனுதாரர் கடந்த 28.07.2025 அன்று நீதிமன்றத்தால், போதிய அவகாசம் கொடுக்கப்பட்டும் வாதி தரப்பில் கூடுதல் சாட்சியத்தை சமர்பிக்க தவறியமையால் வாதி தரப்பு சாட்சியம் முடிவுற்றதாக கருதப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் மனுவை தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் 12.9.2023 முதல் 29.8.2024 வரையிலான கால கட்டத்தில் வாதி தரப்பில் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 4.9.2024 முதல் வாதி தரப்பால் 'Recall'. 'Stay' மற்றும் தற்போது 'Reopen' என தொடர்ந்து சரிவர காரணங்கள் குறிப்பிடாமல் வழக்கை காலம் கடத்தும் நோக்கில் மனுக்கள் தாக்கல்

செய்யப்படுகின்றன என்பதாலும், மனு தள்ளுபடிக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. வழக்கு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக உள்ளது

6.1) மனுவில் வாதி/ PW1 விசாரணை செய்யப்பட்டு தனது தரப்பில் PW2 & PW3 சாட்சி விசாரணை செய்யப்பட்டு கூடுதல் சாட்சி விசாரணைக்காக வைக்கப்பட்ட நிலையில் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் வாய்தா தேதியில் மேற்கொண்ட சாட்சிகளை விசாரணை செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், இன்னும் இரண்டு சாட்சிகள் விசாரிக்க வேண்டி இருக்கிறது என்றும், சில ஆவணங்களும் தாக்கல் செய்ய இருக்கிறதாகவும், முடிக்கப்பட்ட வழக்கு விசாரணையை Re-open வேண்டப்பட்டுள்ள நிலையில், **மாறாக** எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையில் மனுவில் சரியான காரணங்களை குறிப்பிடாமலும், சாட்சி பட்டில் மற்றும் / அல்லது குறியீடு செய்ய வேண்டி ஆவணத்தின் விவரங்களை குறிப்பிடாமலும், reopen செய்ய வேண்டிவேண்டியிருப்பதாகவும், வழக்கில் பல மனுக்களை தாக்கல் செய்து காலதாமதபடுத்துவதாக குறிப்பிட்டு, ஆட்சேபிக்கப்பட்டிருப்பதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, வாதி கூறிய உடல்நிலை குறைவு காரணம் நீதிமன்றத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில்

இல்லை. உடல்நிலை குறைவுக்கு ஆதாரமான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் வாதி வழக்கை காலதாமதப்படுத்தியதை அறிய முடிகிறது. இருந்தபோதிலும், நீதியின் நலன் கருதி நிபந்தனைகளுடன் மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கை குறிப்பிட்ட மேற்கொண்ட இன்னும் இரண்டு சாட்சிகள் மூலம் நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பு வழங்க தீர்மானித்து இம்மனுவை நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என்று முடிவு காண்கிறது.

7. முடிவாக, இம்மனு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

1. ரூ.3000/- மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு 26.8.2025 க்குள் கொடுக்க வேண்டும்.

2. குறிப்பிட்ட மேற்கொண்ட இரண்டு சாட்சிகள் காலதாமதமின்றி வாய்தா தேதிகளில் தவறாமல் விசாரிக்கப்படவேண்டும்.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு
வ.வி.எண்.166/2025
இன்
அ.வ.எண்.165/2004
நாள்.19.08.2025